தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ உணவுச் சட்டம்

1995

## 1995 ஆம் ஆண்டின் 01 ஆம் எண் சட்டம்

தமிழீழ நீதி நிர்வாகத்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

430 · P

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
15 - 3 - 1995
யாழ்ப்பாணம்

# தமிழீழ உணவுச் சட்டம்

# 1995

## 1995 ஆம் ஆண்டின் 01 ஆம் எண் சட்டம்

*தமிழீழ நீதிநிர்வாகத்துறை,*
*தமிழீழ விடுதலைப்புலிகள்,*
*தமிழீழம்.*

தமிழீழ சுகாதார சேவைகள்
பணியகம்
இல. 6/2 இளங்கோ வீதி
யாழ்ப்பாணம்

15-3-1995

*முதற் பதிப்பு:* 1995 பெப்ரவரி
*வெளியீடு:* தமிழீழ நீதி நிர்வாகத்துறை
*விலை:* ரூபா 50/=

340.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## 1995ஆம் ஆண்டின் 01ஆம் எண் சட்டம்

உணவுப் பொருளையோ, உணவையோ ஆக்கல், இறக்குமதி, விற்பனை, வழங்கல் என்பனவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான செயற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இச்சட்டம் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதலுடன் சட்டமாக்கப்படுகிறது.

''இச்சட்டத்தின் பெயரும் சுருக்கப் பெயரும்''

இச்சட்டம் 'தமிழீழ உணவுச் சட்டம்' எனப் படுவதுடன் 1995ஆம் ஆண்டின் 01ஆம் எண்சட்டம் என்றும் அழைக்கப்படும்.

''நடைமுறைக்கு வரும்நாள்''

இச்சட்டம் 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் நாள் முதல் செல்லுபடியானதாகும்.

### இயல் : 01

### உணவு தொடர்பிலான தடை

''உணவு ஆக்கம், இறக்குமதி, விற்பனை, வழங்கல் பற்றிய தடை''

01. (1) ஆளெவரும்–

(அ) சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கின்றதும், சுகாதாரத்துக்குக் கேடான இயற்கையான அல்லது சேர்க்கப்பட்ட பதார்த்தத்தைத் தன்னகத்து அல்லது தன்மேல் கொண்டுள்ளதுமான ஏதேனும் உணவை; அல்லது

(ஆ) மனிதர் உட்கொள்ளக்கூடாததாயுள்ள ஏதேனும் உணவை; அல்லது

(இ) ஏதேனும் தூய்மையற்ற அல்லது அழுகலான அல்லது பதனிழந்த அல்லது சீரழிந்த அல்லது இறந்த விலங்கின் பதார்த்தத்தை அல்லது பதனிழந்த

தாவரப் பதார்த்தத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் கொண்டிருக்கின்றதான அல்லது பூச்சி மொய்த்ததான ஏதேனும் உணவை; அல்லது

(ஈ) கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உணவை; அல்லது

(உ) இச்சட்டத்தின் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் சேர்க்கப்பட்ட ஏதேனும் பொருட் கூறைத் தன்னகத்து அல்லது தன்மேல் கொண்டுள்ள ஏதேனும் உணவை; அல்லது

(ஊ) இச்சட்டத்தின் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின் ஏற்பாடுகளை மீறுகின்ற வகையிலான ஏதேனும் உணவை;

ஆக்குதலோ, இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ, வழங்கலோ ஆகாது.

(2) ஆளெவரும் உடநலத்துக்கொவ்வாத நிலைமைகளில் ஏதேனும் உணவை விற்பனைக்காக ஆக்குதலோ, அணியப்படுத்தலோ, பேணிக்காத்தலோ, பொதியாக்குதலோ, களஞ்சியப்படுத்துதலோ ஆகாது.

(3) ஆளெவரும் உடநலத்துக்கொவ்வாத நிலைமைகளில் விற்பனைக்காக ஆக்கப்பட்ட அல்லது அணியப்படுத்தப்பட்ட அல்லது பேணிக்காக்கப்பட்ட அல்லது பொதியாக்கப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட ஏதேனும் உணவை இறக்குமதி செய்தலோ, வழங்கலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

02. (அ) ஆளெவரும் ஆக்கம் அல்லது உருவாக்கம் செய்யும் உணவுப்பொருள்களைப் பொதியிடும் போது சுட்டுத்துண்டிடுதல் அவசியமானதாகும். விற்பனை செய்யவோ, விற்பனைக்காக வெளிக்காட்சியாக வைக்கவோ, வழங்கவோ பொருளின் தன்மை, உள்ளீடு, ஆக்குனர் தொடர்பான பெயர், முகவரி என்பன சுட்டுத்துண்டில் இடம்பெறல் வேண்டும்.

(ஆ) ஆளெவரும் பொய்யான முறையில் அல்லது பிழைவழி உய்க்கும் முறையில் அல்லது அனுப்பும் முறையில் அல்லது ஏதேனும் உணவுப் பொருளின் பண்பு அல்லது பெறுமதி அல்லது அளவு அல்லது சேர்வை அல்லது இயல்பு அல்லது காப்புத் தொடர்பாக வலுவான கருத்தை உண்டாக்கும் வாய்ப்புள்ளதான வகையிலே அந்த உணவிற் சுட்டுத் துண்டு இடுதலோ, அதனைப் பொதியாக்குதலோ, பதனிடுதலோ, பதப்படுத்தலோ, விற்பனை செய் தலோ, விளம்பரப்படுத்தலோ ஆகாது.

*''உணவிற் பிழைவழியிற் சுட்டுத்துண்டு இடல், விளம் பரப்படுத்தல்'' என்பன பற்றியது.*

விளக்கம்

இச்சட்டத்தின்படி ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிக ளால் தேவைப்படுத்தப்பட்டவாறாகச் சுட்டுத்துண்டு இடப்படாத அல்லது பொதியாக்கப்படாத அல்லது அவ்வொழுங்குகளுக்கு முரணாகச் சுட்டுத்துண்டு இடப்பட்ட அல்லது பொதியாக்கப்பட்ட ஏதேனும் உணவானது, இப்பிரிவுக்கு முரணாகச் சுட்டுத்துண்டு இடப்பட்டதென அல்லது பொதியாக்கப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

03. ஏதேனும் உணவுக்கெனத் தகுதிப்பாடு ஒன்று விதந்துரைக்கப்பட்டிருக்குமிடத்து, ஆளெவரும் அந்தத் தகுதிப்பாட்டுக்கு வழியொழுகவிராத ஏதேனும் உணவினை தகுதிப்பாடுடையதென, வரை யறுக்கப்பட்ட ஓர் உணவு என, மயக்கமுண்டாக்கும் வாய்ப்புக் கொண்ட அத்தகைய வகையில் சுட்டுத் துண்டு இடுதல் அல்லது அதனைப் பொதியாக்குதல் அல்லது விற்பனை செய்தல் அல்லது விளம்பரப்படுத் துதல் ஆகாது.

*''உணவுக்கான தகுதிப் பாட்டினை மயக்கத்துடன் ஆக்குதல்''*

04. முதன்மை உணவு அலுவலரின் அல்லது அதற் கென அவரால் எழுத்தில் வழங்குரிமையளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளின் ஒப்புகையுடனும் அந்த அலுவலரால் அல்லது அத்தகைய வேறு ஆளால் விடுக்கப்பட்ட பணிப்புக்களுக்கு இணங்கவும் அன்றி, ஆளெவரும் பழுதான அல்லது மனிதர் உட் கொள்ளக்கூடாததாக்கப்பட்ட ஏதேனும் உணவை

*''முதன்மை உணவலுவல ரின் அல்லது அவரால் எழுத் தினால் அமர்த் தப்பட்ட அலு வலரின் ஒப்பு*

"கையின்றிப் பழுதான உணவை வேறு தேவைக்குப் பயன் படுத்தல்"

விலங்கு உணவாகப் பயன்படுத்துவதற்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக விற்பனைக்கு முன்வைத்தலோ, வெளிக்காட்டி வைத்தலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

"தகைமை போன்றன தொடர்பிலான பொறுப்புரை வழங்கல்" பற்றியது.

05. (1) ஏதேனும் உணவினை ஆக்குனர் ஒருவர் அல்லது வழங்குனர் ஒருவர் அல்லது தரகு முகவர் ஒருவர் அல்லது வணிகர் ஒருவர், அத்தகைய உணவின் தன்மை அல்லது பதார்த்தகுணநலன், தகைமை ஆகியன தொடர்பில் வரையறுக்கப்பட்ட படிவத்திலான பொறுப்புரைகளையும் எவரேனும் விற்பனையாளருக்குக் கொடுத்தாலன்றி, அத்தகைய பொருளை விற்பனை செய்தல் ஆகாது.

(2) ஏதேனும் உணவின் விற்பனை தொடர்பில், அத்தகைய எவரேனும் ஆக்குனரால் அல்லது தரகு முகவரினால் அல்லது வணிகரினால் அந்த உணவின் விற்பனையாளருக்குக் கொடுக்கப்பட்ட உண்டியல் அல்லது காசு நிருபம் அல்லது அனுப்பும் பொருட்பட்டியல், அந்த உணவின் தன்மை, பதார்த்த குண இயல்பு, தகைமை ஆகியனபற்றி ஒரு விளக்கத்தைக் கொண்டிருந்தால், அத்தகைய உண்டியல் அல்லது காசு நிருபம் அல்லது அனுப்பும் பொருட்பட்டியல், அந்த உணவு தொடர்பில் இந்தப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்படி பொறுப்புரையொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

(3) ஏதேனும் உணவின் ஆக்குனர் அல்லது வழங்குனர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர் எவரும் பொய்யானதாகவுள்ள பொறுப்புரையொன்றை இப்பிரிவின் (01) ஆம் உட்பிரிவின்படி கொடுத்தலாகாது.

"உரிய உரிமம் இன்றிச் செய்யும்

06. (1) இயைபான உணவு அலுவலரினால் (இவரே உரிமமளிக்கும் அலுவலராக இருப்பார்) எவையேனும் வளவுகளுக்கு உரிமம் அளிக்கப்பட்டிருந்

தாலன்றி ஆளெவரும், அத்தகைய வளவுகளில் ஏதே னும் உணவை ஆக்குதலோ, அணியப்படுத்தலோ, பேணிக்காத்தலோ, பொதியாக்குதலோ, களஞ்சியப் படுத்துதலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

உணவு வழங்குகை''

(2) ஆளெவரும், ஏதேனும் உணவை ஆக்கு வதற்கு அல்லது அணியப்படுத்துவதற்கு அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வ தற்கு அல்லது வழங்குவதற்கு வழங்குரிமையளிக்கின்ற அவ்வாண்டுக்கான உரிமமொன்றினை தமிழீழ முதன்மை உணவு அலுவலர் அல்லது உணவு அலுவ லரிடமிருந்து பெற்று வைத்திருந்தாலன்றி அந்த உணவை ஆக்கஞ் செய்தலோ, அணியப்படுத்தலோ, களஞ்சியப்படுத்தலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

## இயல் : 02

## பொறுப்பாள்கை

07. தமிழீழ சுகாதார சேவைகள் பகுதிப் பொறுப் பாளரே இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக முதன்மை உணவு அலுவலராக இருத்தல் வேண்டும்.

''முதன்மை உணவு அலுவலர் இச்சட்டப்படி செயற்படக்கூடிய வாறானவை'' பற்றியது.

(1) முதன்மை உணவலுவலர் எல்லா உணவு உயர் அலுவலர்களையும், வழங்குரிமையளிக் கப்பட்ட அலுவலர்களையும் கண்காணித்தலும், வழிப்படுத்தலும், ஒருங்கிணைத்தலும் வேண்டும்.

(2) முதன்மை உணவலுவலர் தமிழீழத் தேசியத் தலைவரின் இசைவுடன் இச்சட்டத்தின்படி யான எல்லா மேலுரிமைகளையோ, ஏதாவது மேலுரிமையையோ அவரின் கீழ் நிலை அலுவலர் ஒரு வருக்கு அவரின் பெயரில் எழுத்தினால் வழங்கலாம்.

(3) இச்சட்டத்தின் கட்டுப்பாடுகளையும் இதன்படி ஆக்கப்பட்ட ஒழுங்குகளையும் நிறைவேற் றவும், நடைமுறைப்படுத்தவும் தேவைக்கேற்ற உணவு

உயர் அலுவலர்களை முதன்மை உணவு அலுவலர் அமர்த்துவார்.

(4) இச்சட்டத்தின் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அல்லது ஏதாவது கட்டுப்பாட்டையும் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஒழுங்குகளை நிறைவேற்றுவது அல்லது நடைமுறைப்படுத்துவது தொடர்பாக முதன்மை உணவு அலுவலர் தேவையானவையெனக்கருதும் கட்டளைகளை எந்த உணவு உயர் அலுவலருக்கும், வழங்குரிமையளிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் வழங்க முடியும். அவ்வாறு கட்டளை வழங்கப்பட்ட ஒவ்வொரு உணவு உயர் அலுவலரும் அல்லது வழங்குரிமை அளிக்கப்பட்ட உணவு அலுவலரும் அக்கட்டளைகளுக்கமைய நடத்தல் வேண்டும்.

(5) சுகாதார மருத்துவ உயர் அலுவலர், சுகாதார சேவைகள் பகுதியின் வெளிக்கள அலுவலர், உணவு மருத்துவ ஆய்வாளர், உணவு ஆய்வாளர், பொது சுகாதார பரிசோதகர், சுகாதார தரிசிப்பாளர் ஆகியோருடன் கால்நடை மருத்துவரும் இறைச்சி ஆய்வு, பறிமுதல் தொடர்பாக இச்சட்டத்தின்படி தத்தமது பகுதிகளில் வழங்குரிமையளிக்கப்பட்ட அலுவலர்களாகக் கருதப்படுவார்கள்.

''வழங்குரிமை பெற்ற அலுவலர் தனது கடமைகளைப் புரிதலும் வழங்குரிமைகளைச் செலுத்துதலும்'' பற்றியது.

08. (1) வழங்குரிமை பெற்ற அலுவலர் ஒருவர், தமது கடமைகளைப் புரிவதற்கும், வழங்குரிமைகளைச் செலுத்துவதற்குமாக;

(அ) ஏதேனும் பொருள் ஆக்கப்படுகின்றது அல்லது அணியப்படுத்தப்படுகின்றது அல்லது பேணிக்காக்கப்படுகின்றது அல்லது பொதியாக்கப்படுகின்றது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்றது அல்லது விற்பனைசெய்யப்படுகின்றது என அவர் நம்புகின்ற ஏதேனும் இடத்தினுள் எந்நேரத்திலும் நுழையலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் பொருளைப் பரீட்சிக்கலாம், அதனுடன் அதன் வகைகாட்டிகளை எடுக்கலாம் என்பதுடன், அந்தப் பொருளின் ஆக்குகைக்கு அல்லது அணியப்படுத்தற்கு அல்லது பேணிக்காப்புக்கு அல்லது பொதியாக்குகைக்கு அல்லது களஞ்சி

யப்படுத்துகைக்கு அல்லது விற்பனைக்குப் பயன்படுத்தப்படுகின்றது என அவர் நம்புகின்ற எதனையும் அவர் பரீட்சிக்கலாம்.

(ஆ) தேடுகை நோக்கத்திற்காக, ஏதேனும் பொருள் கொண்டு செல்லப்படுகின்றது என அவர் நம்புகின்ற ஏதேனும் ஊர்தியை நிறுத்தி அல்லது தடுத்து வைத்து அவ்வூர்தியில் தேடுதல் நடத்தலாம் என்பதுடன், அத்தகையபொருளைப் பரீட்சித்து அப்பொருளின் வகைகளையும் எடுக்கலாம்.

(இ) ஏதேனும் பொருளை உள்ளடக்கியது என அவர் நம்புகின்ற ஏதேனும் கொள்கலத்தை அல்லது பொதியைத் திறந்து பரீட்சிக்கலாம்.

(ஈ) வழங்குரிமைபெற்ற அலுவலர் சுகாதார மருத்துவ உயர் அலுவலராக அல்லது உணவு அலுவலராக இருக்குமிடத்து 08 (1) (அ) என்னும் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் இடத்தில் காணப்படுகின்றவையும், ஏதேனும் பொருள் தொடர்பாக இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது வலியுறுத்துவதற்கு இயைபானதாகவுள்ள ஏதேனும் தெரிவிக்கையை உள்ளடக்கியுள்ளன என அவர் நம்புகின்றவையுமான எவையேனும் பொத்தகங்களையோ, ஆவணங்களையோ, வேறு பதிவேடுகளையோ பரீட்சிக்கலாம் என்பதுடன், அவற்றின் பிரதிகளை அணியப்படுத்தலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களை எடுக்கலாம்; அதனுடன்

(உ) எந்தப்பொருளின் ஊடாக அல்லது எந்தப்பொருள்தொடர்பாக இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குகள் மீறப்பட்டுள்ளன என அவர் நம்புகின்றாரோ அந்தப்பொருளைத் தேவையான அத்தகைய காலத்திற்குக் கைப்பற்றித்தடுத்து வைக்கலாம்.

(2) இப்பிரிவினதும் 09ஆம் பிரிவினதும் நோக்கங்களுக்காக ''பொருள்'' என்பது; ''எட்டாம், ஒன்பதாம் பிரிவு

களின் நோக்கங்களுக்கமையப் பொருள் எனப்படுவது''

(அ) மனிதர் உட்கொள்வதற்கெனப் பயன்படுத்தப்படுவதற்குக் கருதப்பட்டதாக அல்லது பயன்படுத்தக்கூடியதாக உள்ளதும், ஏதேனும் இறந்த விலங்கின் அல்லது பறவையின் அல்லது மீனின் முழுமையை அல்லது அதன் ஏதேனும் கூறினை உள்ளடக்குவதுமான ஏதேனும் உணவு;

(ஆ) உணவை ஆக்குவதற்கோ, அணியப்படுத்துவதற்கோ, பேணிக்காப்பதற்கோ, பொதியாக்குவதற்கோ, களஞ்சியப்படுத்துவதற்கோ பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக்கூடிய எதுவும்;

(இ) சுட்டுத்துண்டு இடுவதற்கான அல்லது விளம்பரப்படுத்துவதற்கான ஏதேனும் பொருள்.

**விளக்கம்**

08 ஆம் பிரிவின்படி செயலாற்றுகின்ற வழங்குரிமை பெற்ற அலுவலர் ஒருவர், தேவையேற்படின் தமது வழங்குரிமைச்சான்றைக் காண்பித்தல் வேண்டும்.

''வழங்குரிமையுடைய அலுவலர் நுழையும் அத்தகைய இடத்தில் இருப்பவர் அதற்கு வாய்ப்பை ஏற்படுத்தல்'' பற்றியது.

(3) இப்பிரிவின் (01) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி வழங்குரிமைபெற்ற அலுவலர் எந்த இடத்தினுள் நுழைகின்றாரோ அந்த இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளும், அதனுடன் அந்த இடத்திலே காணப்படும் ஒவ்வோர் ஆளும், தமது மேலுரிமையில் இருக்கும் தேவையான எல்லா உதவிகளையும் வழங்குரிமைபெற்ற அலுவலருக்கு அளித்தல் வேண்டுமென்பதுடன், அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தெரிவிக்கையையும் அத்தகைய வகைகளையும் அவருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் படி அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஒழுங்குகளினால் தமது வழங்குரிமைகளைச் செலுத்திச் செயலாற்றுகின்ற வழங்குரிமை பெற்ற எவரேனும் அலுவலருக்கு, ஆளெவரும் முட்டுக்கட்டையிடுதல் ஆகாது.

(5) எவரேனும் வழங்குரிமைபெற்ற அலுவலர் விற்பனைக்காகப் பார்வைக்கு வைக்கப்பட்ட ஏதேனும் உணவின் வகைகாட்டிகளைப் பெறுவதற்கு வேண்டுகையிடும்போது அந்த உணவைப் பார்வைக்கு வைத்திருக்கின்ற ஆள், வழங்குரிமை பெற்ற அலுவலருக்குத் தேவையான அந்த உணவின் வேண்டப்பட்ட அளவைக்கொடுக்க மறுப்பின் அல்லது எந்த அளவை வகைகாட்டிகளாக எடுப்பதற்கு அவருக்கு வழங்குரிமையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவை அந்த அலுவலர் எடுப்பதற்கு ஒப்புதலளிக்க மறுப்பின், அவ்வாறு மறுக்கின்ற ஆள் இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக வழங்குரிமை பெற்ற அலுவலர் ஒருவருக்கு முட்டுக்கட்டையிட்டுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும்.

''முட்டுக் கட்டையா யிருத்தல் எனப் படுவது''

(6) இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குகளின்படி தமது வழங்குரிமைகளைச் செலுத்துவதில் ஈடுபட்டிருக்கும் வழங்குரிமைபெற்ற எவரேனும் அலுவலருக்கு, ஆளெவரும் வாய்மொழியாகவோ, எழுத்துவாயிலாகவோ பொய்யான அல்லது பிழைவழி உய்க்கின்ற எவையேனும் கூற்றுக்களை அறிந்து கொண்டு வழங்கல் ஆகாது.

''வழங்குரிமை பெற்ற பொது அலுவலருக்குப் பிழையான கூற்றுக் களை வழங்கல்''

(7) உணவு விற்பனையாளர் ஒவ்வொருவரும் வழங்குரிமைபெற்ற அலுவலரொருவரால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின் யாரிடம் கொள்வனவு செய்தாரோ, அந்த ஆளின் பெயர், முகவரி, ஏனைய தெரிவிக்கைகள் ஆகியவற்றை வழங்குரிமை பெற்ற அலுவலருக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

''யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அவர்பற்றிய தெரிவிக்கையை வழங்கல்''

(8) இச்சட்டத்தின்படி வழங்குரிமை பெற்ற அலுவலரொருவராற் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவை வழங்குரிமை பெற்ற அலுவலரின் ஒப்புகையின்றி ஆளெவரும், எவ்வகையிலேனும் அகற்றுதலோ, மாற்றுதலோ, அதில் கையிடுதலோ, வேறு வகையில் அதனில் தலையிடுதலோ ஆகாது.

''சட்டப்படி கைப்பற்றப் பட்ட உணவில் ஆளெவரும் தலையிடலாகாது''

''கைப்பற்றப்பட்ட உணவைக் காப்பது பற்றியது''

(9) இச்சட்டத்தின்படி கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவு, வழங்குரிமைபெற்ற அலுவலரொருவரின் விருப்பத்தின்படி அது கைப்பற்றப்பட்ட கட்டடத்தில் அல்லது இடத்தில் வைக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது அவரின் தற்றுணிபின்படி வேறேதேனும் இடத்திற்கு அகற்றப்படலாம்.

''உணவு கைப்பற்றுகையை அறிவித்தல்''

(10) இச்சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கைப்பற்றுகையைப்பற்றி வழங்குரிமை பெற்ற அலுவலர் உரிய உணவு உயர் அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

''இச்சட்டப்படி கைப்பற்றப்பட்ட உணவை அழித்தல் அல்லது வேறு வகையாகக் கையாளல்'' பற்றியது.

09. (1) எந்த ஒரு பொருள் தொடர்பாக ஒரு தவறு இழைக்கப்பட்டதோ அப்பொருளானது இச்சட்டத்தின்படி வழங்குரிமை பெற்ற அலுவலர் ஒருவரினாற் கைப்பற்றப்பட்டுள்ளவிடத்து, உயர் அலுவலர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் மீறப்பட்டுள்ளனவென அல்லது இதன்படியாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள்மீறப்பட்டுள்ளனவென நிறைவு கொள்ளுமிடத்தும் அதனுடன் கைப்பற்றப்பட்ட பொழுது அத்தகைய பொருளின் உரிமையாளர் அல்லது அத்தகைய பொருளைக் கையாட்சியில் வைத்துள்ள ஆள் அத்தகைய பொருளை அழிப்பதற்கென எழுத்துவாயிலாக இணக்கமளித்துள்ளவிடத்தும், அத்தகைய பொருள் உயரலுவலர் பணிக்கக்கூடியவாறாக அழிக்கப்படலாம் அல்லது வேறுவகையாகக் கையாளப்படலாம்.

''பொருளின் உரிமையாளர் பொருளை அழிக்கஇணங்காத அமையம்''

(2) அத்தகைய பொருளின் உரிமையாளர் அல்லது அதனைக் கையாட்சியில் வைத்துள்ள ஆள், அத்தகைய பொருளை அழிப்பதற்கென எழுத்துவாயிலாக இணக்கம் அளிக்காதவிடத்து உயர் அலுவலரானவர்;

(அ) அத்தகைய பொருள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இதன்படியாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு மீறப்படவில்லையென நிறைவுகொள்ளின், அத்தகைய பொருளை விடுவித்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றிய அறிக்கை

யைத் தமது மேலலுவலர் ஊடாக உரிய முறைமன்றுக்கு அறிவித்தலும் வேண்டும். அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் அல்லது இதன்படியாக்கப்பட்ட ஒழுங்குகள் எவையும் மீறப்பட்டுள்ளனவென அவர் நிறைவுகொள்ளும்பட்டத்து, உடனடியாக அத்தகைய பொருளின் உரிமையாளருக்கு அல்லது அப்பொருளைக் கையாட்சியில் வைத்துள்ள ஆளுக்கு அறிவித்தல் கொடுப்பதுடன், எந்த இடப்பரப்பில் தவறு இழைக்கப்பட்டதோ, அந்த இடப்பரப்பின் மீது முறையாட்சி வரம்பு கொண்ட குற்றவியல் முறைமன்றுக்கு, எப்பொருள் தொடர்பாகத் தவறு இழைக்கப்பட்டதோ அப்பொருளின் கைப்பற்றல் பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) 09 (2) (ஆ) என்னும் உட்பிரிவின்படி முறைமன்றுக்குத் தெரிவிக்கை கொடுக்கப்பட்டதன் மீது, அத்தகைய முறைமன்றானது;

(அ) விளக்கத்தின் பின்னர் பொருளின் உரிமையாளர் அல்லது அதனைக் கையாட்சியில் வைத்துள்ளவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது இதன்படியாக்கப்பட்ட ஒழுங்குகள் எவற்றையும் மீறியமைக்காகக் குற்றவாளியெனக் காணின், அத்தகைய பொருள் முறைமன்று பணிக்கும் வகையில் கையாளப்படுவதற்கெனப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டுமென்று குறித்த அலுவலருக்குக் கட்டளையிடுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், தவறிழைத்தவர் எவரென அறியப்படாதவிடத்து அல்லது அவரைக் கண்டுபிடிக்க முடியாதவிடத்து, அத்தகைய பொருளானது, அத்தகைய மீறுகை தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் ''பறிமுதலாக்கப்படுதல் வேண்டும்'' என உயரலுவலருக்குப் பணித்தல் வேண்டும். அல்லது

(ஆ) விளக்கத்தின் பின்னர் பொருளின் உரிமையாளர் அல்லது அதனைக் கையாட்சியில் வைத்துள்ளவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்

றையும் அல்லது இதன்படியாக்கப்பட்ட ஒழுங்குகளுள் எவற்றையும் மீறியமைக்கான குற்றவாளியல்லரெனக் காணின், அத்தகைய உரிமையாளருக்கு அல்லது கையாட்சியில் வைத்துள்ள ஆளுக்கு அத்தகைய பொருள் கொடுபடக்கூடியதாயின் அது விடுவிக்கப் படுதல் வேண்டுமென்று கட்டளையிடுதல் வேண்டும்.

"கைப்பற்றப்பட்ட உணவைக் காப்பது பற்றியது"

"உணவு கைப்பற்றுகையை அறிவித்தல்"

10. (1) வழங்குரிமைபெற்ற அலுவலரொருவர் அவ ரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவை அல்லது ஏதேனும் பகுதியை அல்லது அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் வகைகாட்டியை 09 (1) ஆம் பிரிவின் படி அது அழிக்கப்பட்டிருந்தாலொழிய தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளருக்குப் பகுப்பாய் வுக்காக அல்லது நுண்ணோக்குக்காக முதன்மைஉணவு அலுவலரூடாக முற்படுத்தல் வேண்டும்.

"இச்சட்டப்படி கைப்பற்றப்பட்ட உணவை அழித்தல் அல்லது வேறு வகையாகக் கையாளல்" பற்றியது.

(2) தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் 10 (1) ஆம் பிரிவின்படி அவரிடம் முற்படுத்தப்பட்ட ஏதேனும் உணவின் பகுப்பாய்வை அல்லது பரீட்சித்தலைச் செய்துள்ளவிடத்து, அது பற்றி உரிய உணவு உயர் அலுவலருக்கு அவர் ஒரு சான்றிதழை அல்லது அறிக்கையை வழங்குதல் வேண் டும். தமது பரீட்சித்தல் அல்லது பகுப்பாய்வின் பெறு பேறுகளை அந்தச் சான்றிதழில் அல்லது அறிக்கை யில் அவர் தருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (01)ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களில் எது எப்படியிருப்பினும், முதன்மை உணவு அலுவலர் வேறொரு பகுப்பாய்வு நிறுவனத்திற்கு ஏதேனும் உணவை அல்லது அதன் ஏதேனும் பகுதியை அல்லது அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் வகைகாட் டியை முற்படுத்தலாம்.

"பொருளின் உரிமையாளர் பொருளை அழிக்க இணங்காத அமைவு"

11. 12ஆம் பிரிவின் ஏற்பாடுகளில் எது எப்படி யிருப்பினும், முதன்மை உணவு அலுவலர் தவறொன் றைப் புரியும் ஒவ்வோர் ஆளும் ஒவ்வொரு தவறை யும் ஒத்துக்கொண்டு எழுத்துவாயிலாகத் தெரியப் படுத்துவாராயின் முதன்மை உணவு அலுவலர் தவ றொவ்வொன்றுக்கும் இச்சட்டத்திற் குறித்துரைக்கப்

பட்டவாறு ஐயாயிரம் ரூபா(5,000/-)வுக்கு மேற்படாமற் குற்றக்காசு அறவிட மேலுரிமையுடையவராதல் வேண்டும். இப்பிரிவின்படி குற்றக்காசு அறவிடும் அத்தகைய அலுவலர் அதற்குக் காலாயிருந்த குறித்த உணவுப்பொருளை அழிக்கவோ அல்லது வேறுவகையாகக் கையாளவோ மேலுரிமையுடையவராதல் வேண்டும்.

## இயல் : 03

### சட்ட நடவடிக்கைகள்

12. (1) இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற அல்லது இச்சட்டத்தின்படி விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் பின்வருமாறு ஒறுக்கப்படுதலும் வேண்டும். ''இச்சட்டத்தை மீறுவோருக்கான ஒறுப்பு''

(அ) அத்தவறின் தன்மையானது,பொதுமக்களின் உடலலத்துக்கு ஊறுவிளைவிக்கும் தன்மையினதாக இருக்குமிடத்து இரண்டாயிரம் ரூபா (2,000/-) வுக்குக் குறையாததும் ஒரு நூறாயிரம் ரூபா (1,00,000/-) வுக்கு மேற்படாததுமான குற்றக்காசினால் அல்லது மூன்று ஆண்டுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகைச்சிறையொறுப்பினால் அல்லது இவை இரண்டினாலும்;

(ஆ) அத்தவறானது 08 ஆம் பிரிவின் 04 ஆம் உட்பிரிவினை அல்லது அப்பிரிவின் 08 ஆம் உட்பிரிவினை மீறியமைக்கானதாக இருக்குமிடத்து இரண்டாயிரம் ரூபா (2,000/-) வுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபா (25,000/-) வுக்கு மேற்படாததுமான குற்றக்காசினால் அல்லது மூன்று மாதத்துக்குக் குறையாததும் ஓர் ஆண்டுக்கு மேற்படாததுமான ஒருகாலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகைச் சிறையொறுப்பினால் அல்லது இவை இரண்டினாலும்;

(இ) அத்தவறு உணவு தொடர்பான சுகாதாரத்துக்குக் கேடேற்படுத்தும் வேறு ஏதேனும் தவறாயின்;

(1) முதலாவது தடவை தவறிழைக்கும் போது ஆயிரம் ரூபா (1,000/-) வுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபா(10,000/-)வுக்குமேற்படாததுமான குற்றக்காசினால் அல்லது ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான எளிய சிறையொறுப்பினால் அல்லது இவை இரண்டினாலும்;

(2) இரண்டாவது தடவை அதேதவறை இழைக்கும்போது அவ்வாறான தவறொன்றுக்கு அல்லது பின்னைய தவறு ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா [5,000/-] வுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபா [25,000/-] வுக்கு மேற்படாததுமான குற்றக்காசினால் அல்லது மூன்று மாதத்துக்குக் குறையாததும் ஓர் ஆண்டுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகைச் சிறையொறுப்பினால் அல்லது இவை இரண்டினாலும் ஒறுக்கப்படல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் படியான அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படியான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர், இச்சட்டத்தின்படி அல்லதுஇதனால் ஆக்கப்பட்ட ஏதேனும்ஒழுங்கின்படி அதேபோன்ற அல்லது அதனை ஒத்த தன்மையினதான இரண்டாவது அல்லது பின்னைய தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து இரண்டாவது அல்லது பின்னைய தவறுக்கென அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் முறைமன்றானது;

இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்கின் உணவு ஆக்கத்திற்காகவும் இறக்குமதிக்காகவும், உருவாக்கத்திற்காகவும் களஞ்சியப்படுத்துவதற்காகவும், விற்பனைக்காகவும் வழங்கலுக்காகவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை [ஏதேனுமிருப்பின்] இல்லாததாக்கலாம். அதனுடன் அதற்கிணங்க உரிமமளிக்கத் தகுதிவாய்ந்த உயர் அலுவலருக்கு அதைப்பற்றி அறிவிக்கலாம்.

13. இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படி தவறொன்றை இழைக்கும் ஒவ்வோர் ஆளும் பிடி கட்டளையின்றி இச்சட்டப்படியான உரிய அலுவலரால் அல்லது காவல்துறை அலுவலரால் பிடிக்கப்படலாம் என்பதுடன் அவர் உரிய காலத்தில் முறையாளர் முன் முற்படுத்தப்படலும் வேண்டும். அதனுடன் இச்சட்டத்தின் படியான அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின் படியான ஒவ்வொரு தவறும் முறையாட்சிவரம்புடைய குற்றவியல் முறைமன்றொன்றினால் விளங்கப்படத் தக்கதாதலும் வேண்டும். ''இச்சட்டப்படி பிடிகட்டளையின்றிப் பிடித்தலும் முற்படுத்தலும்''

14. (1) இச்சட்டத்தின் படியானஅல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படியான தவறொன்றுக்கான குற்ற வழக்கொன்று;

(அ) வழங்குரிமை பெற்ற ஓர் அலுவலராலோ, காவல்துறையினராலோ அன்றி; அதனுடன்

(ஆ) அந்தத்தவறைக் கண்டுபிடித்த நாளிலிருந்து மூன்று மாதகாலம் கழிந்ததன் பின்னரும் தொடுக்கப்படுதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்படியான அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படியான, ஏதேனும் தவறுதொடர்பான விளக்கத்தின்போது எந்நேரத்திலேனும் அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லாத வேறு எவரேனும் ஆள் அறிந்து கொண்டே தவறை இழைப்பதில் தொடர்பு பட்டவராயிருந்தார்எனமுறைமன்றானது, தன் முன்னர் எடுத்துக்கூறப்பட்ட சான்றின் மீது நிறைவுகொள்ளுமிடத்து, முறைமன்றானது 14 (01) (ஆ) எனும் உட்பிரிவின்படி எது எப்படியிருப்பினும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச் சாட்டை மீளப்பெறலாம் என்பதுடன், அந்த வேறு ஆளுக்கெதிராக உரிய குற்றவழக்குத் தொடுக்கப்பட்டு அந்த ஆளுக்கெதிராக நடவடிக்கையும் எடுக்கலாம்.

15. (1) இதனகத்துப்பின்னர் 'குற்றஞ்சாட்டப்பட்டவர்' எனக்குறிப்பீடு செய்யப்படும் ஆளொருவர் ''குற்றஞ்சாட்டப்பட்டவர்

"செய்த முன்னைய முறைப்பாடு" முதலியன பற்றியது.

இச்சட்டத்தின்படி தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து நடைமுறையிலுள்ள சட்டங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏலவே அவரினால் உரியவகையிற் செய்யப்பட்ட முறைப்பாடொன்றின்மீதும், தமது உட்கருத்துப்பற்றி மூன்று நாள்களுக்குக் குறையாத அறிவித்தலை வழக்குத் தொடுனர் சார்புக்குக் கொடுத்ததன்மேலும், உண்மையான தவறிழைத்தவரெனத் தாம் குற்றஞ்சாட்டுகின்ற வேறெவரேனுமாளை முறைமன்றின் முன்னர் உரிய அலுவலருடாகக் கொணர்விக்க உரித்துடையராதல் வேண்டுமென்பதுடன், தவறு இழைக்கப்பட்டது என்பது எண்பிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய வேறு ஆளின் செயலினால் அல்லது தவறுகையினாலேயே அத்தவறு இழைக்கப்பட்டதென முறைமன்று நிறைவுகொள்ளும் வகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் எண்பிப்பாரெனின், அத்தவறுக்காக அத்தகைய வேறு ஆளுக்குப் புதிய குற்றப்பகர்வொன்றின்மீதான நடவடிக்கைகளினூடாகக் குற்றத்தீர்ப்பளிக்கவும்படலாம். அதனுடன் இச்சட்டத்தின் அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடுகளை வலுவூட்டுவதற்கென உரிய எல்லாவற்றையும் விழிப்புடன் தாம் கருத்திற்கொண்டார் என "முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர்" மேலும் எண்பிப்பாரெனின், அவர் அத்தவறிலிருந்து விடுதலை செய்யப்படலாம்.

"இப்பிரிவின் முதலாம் உட்பிரிவைத் தம் சார்பாகக் கைக்கொள்ளுதல்" பற்றியது.

(2) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் பிரிவு 15 இன் (01) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைத் தமக்கு வாய்ப்பாக நாடுமிடத்து;

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிப்பின், குற்றஞ்சாட்டப்பட்டவரையும், தமது சார்புரைகளுக்குத் துணையாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரினால் அழைக்கப்படும் எவரேனும் சான்றுரைஞரையும் குறுக்குக் கேள்வி கேட்பதற்கும், மறுதலிக்கும் சான்றுகொடுப்பதற்கென எவரேனும் சான்றுரைஞரை அழைப்பதற்கும் மேலும் சான்றுகளை முன்வைப்பதற்கும் வழக்குத் தொடுனர் சார்பும், அதனுடன் உண்மையாகத் தவறிழைத்தவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றஞ்சாட்டுகின்ற ஆளும், உரிமையுடையவராதல் வேண்டும்.

(ஆ) வழக்கு நடவடிக்கைக்கான எவரேனும் சார்பினர் அந்த வழக்கு நடவடிக்கைகளின் வேறெவரேனும் சார்பினருக்குச் செலவுத்தொகைகளைச் செலுத்துவதற்காக முறைமன்று தக்கதென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) எத்தவறு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிராக இச்சட்டத்தின்படி வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட முடியுமோ அத்தவறொன்று, இச்சட்டத்தின்படி இழைக்கப்பட்டுள்ளதென உரிய உணவு உயர் அலுவலருக்குத் தோன்றுமிடத்தும், அதனுடன் முறைப்பாடு செய்யப்பட்ட தவறு, வேறோர் ஆளின் செயலினால் அல்லது தவறுகையினால் ஏற்பட்டதெனவும், முதற்கூறப்பட்ட ஆள் இப்பிரிவின் (01) ஆம் உட்பிரிவின்படி எதிர்க்காப்பினை நிலைநாட்டக்கூடியவராயுள்ளாரெனவும் அந்த உயர் அலுவலர் போதிய அளவில் நிறைவு கொள்ளுமிடத்தும், அந்த உயர் அலுவலரானவர், முதற்கூறப்பட்ட ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளை முதற்கண் மேற்கொள்ளாமல் அந்த வேறு ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளை முதற்கண் மேற்கொள்ளலாம்.

''உரிய உணவு உயர் அலுவலர் முறைமையான ஐயத்தின்பொருட்டு இரண்டாம் ஆள் ஒருவர் மீது குற்ற வழக்கிடுதல்''

அத்தகைய ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில், முதற்கூறப்பட்ட ஆள் எந்தத் தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கலாமோ, அதே தவறுக்காக அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தவறுக்கு அல்லது புதிய தவறொன்றுக்கு அந்த வேறு ஆள் குற்றஞ்சாட்டப்படலாமென்பதுடன், அத்தவறானது அந்த வேறு ஆளின் செயலினால் அல்லது தவறுகையினால் ஏற்பட்டதென எண்பிக்கப்பட்டதன்மேல், அந்தத் தவறுக்காக, அந்த வேறு ஆளுக்கு எதிராகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படலாம்.

16. (1) இச்சட்டத்தின்படியான அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குகளின்படியான தவறொன்றுக்கான குற்றவழக்கொன்றில்;

''குற்றஞ் சாட்டப்பட்டவர் முன்வைக்கக் கூடிய எதிர் வழக்குரை''

(அ) 05 ஆம் பிரிவின்படி எழுத்திலான துணைக்கட்டுப்பாட்டைத் தமக்குக் கொடுத்துதவிய இன்னோர் ஆளிடமிருந்து தாம் உணவைக் கொள்

வனவு செய்த நேரத்தில் இருந்த அதே நிலையிலேயே அதனை விற்றாரெனவும்; அல்லது

(ஆ) அந்த உணவின் விற்பனை இச்சட்டத்தை அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கினை மீறிச் செயலாற்றுவதாக இருக்குமெனத்தாம் போதிய விழிப்புடன் கருத்திற்கொண்டு உறுதிப்படுத்தியிருக்கமுடியாதெனவும்; அல்லது

(இ) விளம்பரமொன்றை வெளியிட்டனர் என்பதுபற்றிய தவறொன்று தொடர்பாக வழமையான தொழில் நெறியின்போது வெளியீட்டுக்காக அவ்விளம்பரத்தைப் பெற்றாரெனவும், தவறொன்று இழைக்கப்படும் என நம்புவதற்பொருட்டான எதுவும் தமக்கு இருக்கவில்லையெனவும்

கூறுவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்வழக்குரையாக அமையலாம்.

''குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிர் வழக்குரையாக அமையத்தகாதவை''

17. (1) பரீட்சித்தலுக்காக அல்லது

(2) கலப்படம்செய்யப்பட்ட உணவை விற்பனை செய்த தவறுக்கான அல்லது இச்சட்டத்தின் அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடுகளுக்கு முரணான உணவை விற்பனை செய்த தவறுக்கான குற்றவழக்கொன்றில் அத்தகைய உணவானது கலப்படம் செய்யப்பட்டிருந்ததைத் தாம் அறிந்திருக்கவில்லையெனவும் அல்லது விற்பனையானது இச்சட்டத்தின் அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடுகளுக்கு முரணாக இருந்தது எனத் தாம் அறிந்திருக்கவில்லை எனவும் அல்லது கொள்வனவு செய்பவர் பகுப்பாய்வுக்காக அந்த உணவைக் கொள்வனவு செய்தார் என்றும் அத்தகைய விற்பனையால் அவர் கேடுறவில்லை என்றும் கூறுவது. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்வழக்குரையாக அமைதல் ஆகாது.

''உணவுப் பகுப்பாய்வாளரின்

(3) பரீட்சித்தலுக்காக அல்லது பகுப்பாய்வுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுப்பாய்வாளரிடம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் இரசாயனப்

பகுப்பாய்வாளரிடம் முன்வைக்கப்பட்ட ஏதேனும் பொருள்பற்றி அந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட இரசாயனப்பகுப்பாய்வாளரினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் இரசாயனப்பகுப்பாய்வாளரினால் கையொப்பமிடப்பட்ட அறிக்கையொன்றெனவோ, சான்றிதழ் ஒன்றெனவோ கொள்ளப்படும் ஆவணமொன்றுக்கு முரணான சான்று இல்லாதபோது, அதிற்கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்த வழக்கின் உரிய பொருள் தொடர்பிற் போதுமான சான்றாதல் வேண்டும்.

அறிக்கை சான்றாகக் கொள்ளக் கூடியதாதல்''

(4) இப்பிரிவின் (01) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையை அல்லது சான்றிதழைக் காண்பிக்கக்கருதும் சார்பாளர் அது எந்தச் சார்பாளருக்கெதிராகக் காண்பிக்கக் கருதப்பட்டதோ அந்தச் சார்பாளருக்கு, அந்த அறிக்கையின் அல்லது சான்றிதழின் பிரதியொன்றை முறைமன்றின் ஊடாகக் கொடுத்தல் வேண்டும்.

''01 ஆம் உட்பிரிவின்படியான அறிக்கைகளின் பிரதியை எதிராளிக்கு வழங்குதல்''

18. (1) வழங்குரிமை பெற்ற ஓர் அலுவலரால் பெறப்பட்ட வகைகாட்டி ஒன்று அவரால் பகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒரு பகுதி அவரால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வகைகாட்டி தொடர்பான குற்ற வழக்குத் தொடுக்கப்படும் நேரத்தில் அவரால் வைத்திருக்கப்பட்ட அப்பகுதி முறைமன்றில் முன்வைக்கப்படுதலும் வேண்டும்.

''உரிய அலுவலர் பெற்ற வகை காட்டியின் பகுதியை மன்றில் சேர்த்தல்''

(2) இப்பிரிவின் (01) ஆம் உட்பிரிவின்படி முறைமன்றில் காண்பிக்கப்பட்ட வகைகாட்டியில் அத்தகைய பகுதியை அந்த வகைகாட்டியின் வேறேதும் பகுதியைப் பகுப்பாய்வு செய்த அல்லது பரீட்சித்த இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் பகுப்பாய்வுக்காக அல்லது பரீட்சித்தலுக்காக முறையாளர் தமது பணிப்பின் மீது அனுப்பலாம் என்பதுடன், குற்றவழக்குக்

''முறைமன்று தன்னளவில் இப்பிரிவின் 01 ஆம் உட்பிரிவின்படியான பொருளைப் பகுப்பாய்வு செய்ய அனுப்புதல்''

கான எவரேனும் சார்பாளரின் வேண்டுகோளின் பேரில் அவ்வாறு அனுப்புதலும் வேண்டும்.

*''இரசாயனப் பகுப்பாய் வாளர் 28 நாள்களுக்குள் பகுப்பாய்வு அறிக்கை தரல்'' பற்றியது.*

(3) (அ) இப்பிரிவின் (02) ஆம் உட்பிரிவின் படி வகைகாட்டியின் அத்தகைய பகுதியானது எந்த இரசாயனப்பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்படுகின்றதோ அந்த இரசாயனப் பகுப்பாய்வாளர் வகை காட்டியின் அத்தகைய பகுதியானது அவராற்பெறப் பட்டதிலிருந்து இருபத்தெட்டு நாள்களுக்குள் அது பற்றிய தமது அறிக்கையையோ, சான்றிதழையோ முறைமன்றுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) பகுப்பாய்வுக்கான அல்லது பரீட்சித் தலுக்கான செலவானது முறைமன்று பணிக்கக்கூடிய அத்தகைய சார்பாளரால் செலுத்தப்படல்வேண்டும்.

*''மனிதப்பயன் பாட்டுக்கான உணவு எனக் கருதப்படும்'' என்பது பற்றியது.*

19. (1) இச்சட்டத்தினது அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கினது நோக்கங்களுக்காக;

(அ) மனிதர் நுகர்வதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உணவு விற்பனை செய்யப்படின் அல்லது விற்பனைக்கு வைக்கப்படின் அல்லது வெளிக்காட்சியாக வைக்கப்படின் அது முரணாக எண்பிக்கப்படும் வரையில் மனிதர் நுகர்வதற்கென்ற உட்கருத்துடன் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டது எனக்கருதப்படும்.

(ஆ) ஏதேனும் உணவை உருவாக்குவதற்கு அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வளவுகளில் காணப்படுகின்றதும், மனிதர் நுகர்வதற்கெனப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றதுமான ஏதேனும் உணவு, முரணாக எண்பிக்கப்படும் வரையில், மனிதர் நுகர்வதற்கு எனும் உட்கருத்துடன் விற்பனை செய்யப்படுவதற்கான உணவை உருவாக்குவதற்காகவோ, அந்த உணவுடன் கலப்பதற்காகவோ இருந்ததாகக் கருதப்படும்.

(இ) உணவை உருவாக்குவதற்குப் பயன் படுத்தப்படும் வளவுகளில் காணப்படுகின்றதும், உண

வைக் கலவை ஆக்குவதில் அல்லது உருவாக்குவதில் பயன்படுத்தக்கூடியதுமான ஏதேனும் பொருள் முரணாக எண்பிக்கப்படும் வரையில் மனிதர் நுகர்வதற்கெனும் உட்கருத்துடன் உணவைக் கலவையாக்குவதற்கு அல்லது உருவாக்குவதற்குப் பயன்படுத்தப் படுவதற்காக இருந்ததெனக் கருதப்படும்.

(2) கலப்படம் செய்யப்பட்ட உணவை உருவாக்கம் செய்தலாகிய தவறுக்கான குற்றவழக்கொன்றில்;

''கலப்படம் செய்ததாகக் கருதப்படும்'' என்பது பற்றியது.

(அ) வேறு ஏதேனும் பொருளைக் கலப்பதனால் உணவானது கலப்படம் செய்யப்பட்டதென; அதனுடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தமது கையாட்சியில் அல்லது தமது வளவுகளில் அந்த வேறு பொருளை வைத்திருந்தாரென, எண்பிக்கப்பட்டவிடத்து அவ்வாறில்லையென எதிர் நிறுவப்படும்வரை அந்த வேறுபொருளைக் கலப்பதனால் அந்த உணவு, குற்றஞ்சாட்டப்பட்டவராற் கலப்படம் செய்யப்பட்டதெனக் கருதப்படும்.

(3) ஏதேனும் உணவைக் கொண்டிருக்கின்ற பொதியொன்று, அது எந்த ஆளினால் உருவாக்கம் செய்யப்பட்டதோ அல்லது பொதியாக்கப்பட்டதோ அந்த ஆளின் பெயர் அல்லது அந்த ஆளின் முகவரி எனக்கொள்ளப்படுகின்ற ஒருபெயரை அல்லது முகவரியைத் தன்னகத்து அல்லது தன்மேற்கொண்டிருக்குமிடத்து, அவ்வாறில்லை என எதிர்நிறுவப்படும்வரையில் பொதியினகத்து அல்லது பொதியின்மேல் எந்த ஆளின்பெயர் அல்லது முகவரி தோன்றுகின்றதோ அந்த ஆளினாலேயே நிலமைக்கேற்றவாறு, அந்தப் பொருள் உருவாக்கம் செய்யப்பட்டதெனவோ, பொதியாக்கப்பட்டதெனவோ கருதப்படும்.

''பொதியின் அடங்கலை உருவாக்கம் செய்தவர் எனக்கருதப்படும்'' என்பது பற்றியது.

20. பிரிவு (08) துணைப்பிரிவு (1) (க) இன்படி வழங்குரிமைபெற்ற அலுவலரொருவரால் ஏதேனும் பொத்தகம் அல்லது ஆவணம் அல்லது வேறு பதிவேடு

''பிரிவு 08 (1) (க) இன்படியான

*பொத்தகங்கள் முதலியவற்றில் இருந்துபெறப்பட்ட பொழிப்பு'' போன்றன பற்றியது.*

ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட பிரதியொன்று அல்லது எடுக்கப்பட்ட பொழிப்பொன்று அந்த வழங்குரிமை பெற்ற அலுவலரால் உண்மையான பிரதி அல்லது பொழிப்பு என உறுதிப்படுத்தப்படின், அந்தப் பிரதி அல்லது பொழிப்பு அந்தப்பொத்தகத்தை அல்லது ஆவணத்தை அல்லது பதிவேட்டை வைத்திருக்கின்ற அல்லது பேணிவருகின்ற அல்லது அந்தப் பொத்தகத்தை அல்லது ஆவணத்தை அல்லது பதிவேட்டை வைத்திருக்கச் செய்கின்ற அல்லது பேணிவரச்செய்கின்ற ஆளுக்கெதிராகச் சான்றாக எடுத்துக் கொள்ளப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், அந்தப் பொத்தகத்தில் அல்லது ஆவணத்தில் அல்லது பதிவேட்டில் அடங்கியுள்ளவைபற்றிய முதன்மையான சான்றாக இருத்தல் வேண்டும்.

*''ஆட்களின் குழுவால் இச்சட்டத்தின்படியான தவறு இழைக்கப்படுதல்'' பற்றியது.*

21. இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படி ஆட்களின் குழுவால் தவறொன்று இழைக்கப்படுமிடத்து;

(அ) அந்த ஆட்களின் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அத்தவறானது இழைக்கப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளராகவோ. பொது மேலாளராகவோ, செயலாளராகவோ, அவரை ஒத்த வேறு அலுவலராகவோ இருந்த ஒவ்வோர் ஆளும்; அல்லது

(ஆ) அந்தக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இல்லாதிருப்பின், அத்தவறு இழைக்கப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினரொருவராக இருந்த ஒவ்வோர் ஆளும்;

அத்தவறானது தமது இணக்கமின்றி அல்லது ஒருமைப்பாடின்றி இழைக்கப்பட்டது என்றும், தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அச்சூழ்நிலைகளில் அந்தத்தவறு இழைக்கப்படுவதைத் தடுப்பதற்காகத் தாம் செலுத்தியிருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்பு கவனத்தையும் தாம் கையாண்டார் என்றும், அவர் எண்பித்தாலன்றி அந்தத்தவறுக்கு அவர் குற்றவாளியாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## இயல் : 04

### பொதுவான விளக்கங்கள் பற்றி

''குற்றவழக்கு முதலியன தொடரப் படாமை'' பற்றியது.

22. இச்சட்டத்தின்படி அல்லது இதனால் ஆக்கப் பட்ட எவையேனும் ஒழுங்கின்படி நல்லெண்ணத் துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் குற்றவழக்கு அல்லது இதுபோன்ற எவையேனும் சட்ட நடவடிக்கைகள் தொடரப்படலாகாது.

''ஒருமருத்துவர் தமது இடப்பரப்பில் உணவு நஞ்சானமை பற்றி அறிவிப்பது தொடர்பாக''

23. ஏதேனும் உள்ளூராட்சி மன்றத்தின் பொறுப் பாள்கை இடப்பரப்புக்குள் தமது உயர் பணியை மேற்கொள்ளும் ஒவ்வொருமருத்துவரும், தமது அறி வுக்குட்பட்டவையும், அந்த இடப்பரப்புக்குள் ஏற் பட்டுள்ளமையான உணவு நஞ்சாகியமைபற்றிய எல்லா நிகழ்வுகளையும் சுகாதாரப்பணிகள் பொறுப் பாளருக்கு அல்லது அந்த இடப்பரப்பிற்கான சுகா தார மருத்துவ அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

''இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி துணைஒழுங்குகளை ஆக்குதல்'' பற்றியது.

24. (1) முதன்மை உணவு அலுவலர் இச்சட்டத் தினால் குறித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டவை தொடர்பில் அல்லது ஒழுங்குகள் ஆக்கப்படுவதற்கு முறைத்துறையின் கலந்தாய்வுடன் வழங்குரிமையளிக்கப்பட்டவை தொடர்பில் ஒழுங்கு களை ஆக்கலாம் என்பதுடன், குறிப்பாக முதன்மை உணவு அலுவலர் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியோடு கலந்தாராய்ந்த பின்னர், பின்வரும் எல்லாச் செயல்தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதாயினும் ஒன்று தொடர்பிலும் ஒழுங்குகளை ஆக் கலாம்.

(அ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது வகுப்பினதான பொருள் ஏதேனு முணவில் இருப்பின் அல்லது அந்த உணவுக்குள்ளே கலக்கப்பட்டிருப்பின் அல்லது அதிலிருந்து பிழிந் தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது தவிர்க்கப்பட்டிருப் பின், அந்த உணவு அல்லது வகுப்பினதான உணவு

தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம் ... யாழ்ப்பாணம்

கலப்படம் செய்யப்பட்டதென வெளிப்படுத்துதல் தொடர்பாக;

(ஆ) உணவின் விற்பனைக்காகச் சுட்டுத் துண்டு இடுதலும், பொதியாக்குதலும், விற்பனைக்கு முன்வைத்தலும், வெளிக்காட்சியாக வைத்தலும் அதனுடன் விளம்பரப்படுத்தலும் தொடர்பாக;

(இ) உணவுப்பொதிகளின் பரும அளவும், உரு அளவும், நிறையளவும், மற்றைய அளவுக்குறிப்பீடுகளும் தொடர்பாக;

(ஈ) ஏதேனும் உணவின் விற்பனை அல்லது விற்பனைக்கட்டுப்பாடுகள் தொடர்பாக;

(உ) ஏதேனும் உணவின் அளவு அல்லது பண்பு அல்லது பெறுமதி அல்லது கலவை அல்லது காப்புப்பற்றி நுகர்வோர் அல்லதுகொள்வோர் ஏமாற்றப்படுவதைத் அல்லது பிழைவழி உய்க்கப்படுவதைத் தடுப்பதற்கு அல்லது நுகர்வோரின் அல்லது கொள்வோரின் சுகாதாரத்துக்கு ஊறுவிளைவதைத்தடுப்பதற்கு என அந்த உணவில் ஆக்கக்கூறாக ஏதேனும் பொருளைப் பயன்படுத்துதல் தொடர்பாக;

(ஊ) உணவின் கலவை அல்லது தூய்மை அல்லது தகைமை அல்லது வேறு பருப்பொருள் ஆகியவற்றின் தகுதிப்பாடுகள் தொடர்பாக;

(எ) இச்சட்டத்துடன் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குடன் இணங்கியொழுகுவதை வலியுறுத்துவதற்காக உணவை இறக்குமதி செய்தல் தொடர்பாக;

(ஏ) நுகர்வோரின் அல்லது கொள்வோரின் நலன்கருதி அல்லது அவரின் சுகாதாரத்துக்கு ஊறு விளைவதைத் தடுப்பதற்கு ஏதேனும் உணவை உருவாக்கும் அல்லது ஆக்கும் அல்லது பேணிக்காக்கும் அல்லது பொதியாக்கும் அல்லது களஞ்சியப்படுத்தும் அல்லது நுண்ணாய்வு செய்யும் நெறி தொடர்பாக;

(ஐ) (1) இச்சட்டத்தின் படியான உரிமங்கள் எந்த ஆட்களுக்கும் எந்த அமயங்களிலும், எந்தவரைவு கட்டுப்பாடுகளுக்கு அமையவும், வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம் என்பது தொடர்பாக;

(2) இச்சட்டத்தின் படியான உரிமங்களுக்கான வேண்டுகைகள் எந்த வகையிலும், பாங்கிலும் செய்யப்படலாம்; அதனுடன் செயற்படுத்தப்படலாம் என்பது தொடர்பாக;

(3) உரிமம் ஒன்றைப் பெறுவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணம் தொடர்பாக;

(ஒ) இச்சட்டத்தை அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஒழுங்குகளைத் தகுந்தவகையில் வலியுறுத்தி நடைமுறைப்படுத்துதற்கும் பொறுப்பாள்கை செய்வதற்கும் இன்றியமையாததென முதன்மை உணவு அலுவலர் கருதுகின்ற அத்தெரிசிக்கையைக் கொடுத்துதவும் படியும் அத்தகைய பொத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணிவரும்படியும் உணவு ஆக்கம் செய்யும் அல்லது விற்பனை செய்யும் ஆட்களைத் தேவைப்படுத்தல் தொடர்பாக;

(ஓ) வழங்குரிமைபெற்ற அலுவலர்களின் மேலுரிமைகளும் கடமைகளும், அதனுடன் 08 ஆம் 09 ஆம் பிரிவுகளின் கருத்துக்குட்பட்ட பொருட்களின் வகைகாட்டிகளை எடுத்தலும், பொருட்களைக் கைப்பற்றுதலும், தடுத்துவைத்தலும் அல்லது பறிமுதல் செய்தலும் அதனுடன் கையாளுதலும் தொடர்பாக;

(ஔ) இச்சட்டத்தில் அல்லது இதன்படி ஆக்கப்பட்ட ஒழுங்குகளின் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள் தொடர்பாக;

(க) உணவுப்பகுப்பாய்வு செய்தல் அல்லது பரீட்சித்தல், உணவின் வகைகாட்டிகளை எடுப்பதற்கான நடவடிக்கை ஒழுங்கு, அதனுடன் அத்தகைய உணவைப் பகுப்பாய்வுக்காக அல்லது பரீட்சித்தலுக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணத்தின் இறுப்பு, தொடர்பாக;

(ங) கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உணவை விற்பனை செய்தலும், விற்பனைக்கு இடம் பெயர்த்தலும் தொடர்பான தடைக்கட்டளைகளும் மட்டுப்பாடுகளும்; தொடர்பாகவும் ஆகும்.

"முதன்மை உணவு அலுவலருடாக ஆக்கப்படும் துணை ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படல்" பற்றியது.

(2) முதன்மை உணவு அலுவலர் ஊடாக ஆக்கப்படும் ஒவ்வோர் மாற்று ஒழுங்கும் வெளிப்படையாக வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டு நாளன்று அல்லது அவ்வொழுங்கிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய நாளன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

''கலப்படம் செய்யப்பட்ட'' என்பது.

25. இச்சட்டத்தில் அமயம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய ''கலப்படம் செய்யப்பட்ட'' என்பது;

(அ) சுகாதாரத்துக்கு ஊறுவிளைப்பதாக உணவை ஆக்கும் வகையில்; அல்லது

(ஆ) அதன் பண்பையோ, பெறுமதியையோ, கலவையையோ, குணநலனையோ, காப்பையோ, ஊறுபடுத்தும் வகையில்;

பொருளொன்றை உணவின் ஆக்கக்கூறாகக் கலத்தல் அல்லது உணவிலிருந்து ஏதேனும் கூறைத் தவிர்த்தல் அல்லது வேறேதேனும் பதப்படுத்துகைக்கு அல்லது பதனிடுகைக்கு உணவை உட்படுத்தல் எனப் பொருள்படும்.

''விளம்பரம்''

(இ) 'விளம்பரம்' என்பது ஏதேனும் உணவின் விற்பனையை அல்லது கையுதிர்ப்பை நேரடியாகவோ, மறைமுகமாகவோ, மேம்படுத்தும் நோக்கத்திற்காக எத்தகையதுமான எவ்வழியிலேனும் செய்யப்படும் ஏதேனும் பகர்வையும் உள்ளடக்கும்.

''உணவு''

(ஈ) 'உணவு' என்பது மனிதருக்கான உணவாக அல்லது பருகையாகப் பயன்படுத்துவதற்கென

ஆக்கம் செய்யப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட அல்லது பகர்வு செய்யப்பட்ட ஏதேனும் பொருள் எனப் பொருள்படும் என்பதுடன், உணவின் கலவையில் அல்லது உருவாக்கத்தின் இயல்பாக உள்ளடங்கும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும்.

(உ) 'நலத்திற்கொவ்வாத நிலைமைகள்' என்பது உணவின் தூய்மையைத் தூசால் அல்லது அழுக்கால் அல்லது கழிவுப்பொருளால் கெடுக்கக்கூடிய அல்லது உணவை சுகாதாரத்துக்கு ஊறுவிளைவிக்கக் கூடியனவாக்குகின்ற அத்தகைய நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள் எனப்பொருள்படும். ''நலத்திற் கொவ்வாத நிலைமைகள்''

(ஊ) 'சுட்டுத்துண்டு' என்பது, உணவுக் கொள்கலத்தின்மீதுள்ளதாகவோ, அதனோடு இணைக்கப்பட்டதாகவோ உள்ள எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது உருவரைத்தகட்டிலிடப்பட்ட அல்லது புடைப்பிக்கப்பட்ட அல்லது மேற்பதிக்கப்பட்ட சிட்டையையோ, வணிகக் குறியையோ, குறியீட்டையோ, படத்தையோ, வேறு விளக்கத்தையோ உள்ளடக்கும். ''சுட்டுத் துண்டு''

(எ) 'சுட்டுத்துண்டு இடுதல்' என்பது சுட்டுத்துண்டு ஒன்றையும் உணவுடன் தொடர்புடைய அல்லது இணைந்திருக்கும் எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது வரையுருவான ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும். ''சுட்டுத் துண்டு இடல்''

(ஏ) 'ஆக்கம்' என்பது விற்பனைக்காக ஏதேனும் உணவை உருவாக்குதல் எனப்பொருளாகுமென்பதுடன், சில்லறை விற்பனையில் பொது நடைமுறையில் உணவைப் பொதியாக்குதல் தவிர அல்லது உணவை ஆக்குதல் அல்லது மாற்றுதல், மெருகிடுதல் அல்லது பொதியாக்குதல் அல்லது அதில் சுட்டுத்துண்டு இடுதல் அல்லது வேறுவகையாக உணவைப் பதனிடுதல் என்பனவற்றுக்கான ஏதேனும் செய்முறையையும் அல்லது செய்முறையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கும். ''ஆக்கம்''

"பொதி" (ஐ) 'பொதி' என்பது, ஏதேனும் உணவு முழுமையாகவோ, பகுதியாகவோ உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள அல்லது பொதியாக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒன்றை உள்ளடக்கும்.

"வளவு" (ஒ) 'வளவு' என்பது ஏதேனும் உணவுப் பொருள் விற்பனை செய்யப்படும் அல்லது விற்பனைக்காக ஆக்கம் செய்யப்படும் அல்லது களஞ்சியப்படுத்தப்படும் ஏதேனும் கடையை அல்லது விற்பனைச் சாலையை அல்லது இடத்தை உள்ளடக்கும்.

"விற்பனை" (ஓ) 'விற்பனை' என்பது காசுக்காக அல்லது கடனுக்காக அல்லது கொடுத்து மாற்றுதல் ஊடாக, அதனுடன் மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்தல் எனப்பொருளாகும் என்பதுடன், 'விற்பனை' என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

□□□

| கையாளப்பட்டுள்ள சொற்கள் | நடைமுறையில் இருந்த சொற்கள் |
|---|---|
| 'அ' | |
| 1. அமர்த்தல் | நியமித்தல் |
| 2. அமயம் | சந்தர்ப்பம் |
| 3. அலுவலர் | உத்தியோகத்தர் |
| 'ஆ' | |
| 4. ஆக்கம் | உற்பத்தி |
| 5. ஆக்குநர் | உற்பத்தியாளர் |
| 6. ஆய்வாளர் | பரிசோதகர் |
| 7. ஆய்வு | பரிசோதனை |
| 'இ' | |
| 8. இணக்கம் | சம்மதம் |
| 'உ' | |
| 9. உயர் அலுவலர் | அதிகாரி |
| 10. உருவம் | பரிமாணம் |
| 11. உருவாக்கம் | தயாரித்தல் |
| 'ஐ' | |
| 12. ஐயம் | சந்தேகம் |
| 'ஒ' | |
| 13. ஒப்புகை | அனுமதி |
| 'க' | |
| 14. கட்டளை | உத்தரவு |
| 15. கட்டாயம் | அவசியம் |
| 16. கட்டுப்பாடு | நியந்தனை |
| 'கா' | |
| 17. காப்பு | பாதுகாப்பு |

| | | |
|---|---|---|
| 18. | கூறு | பாகம் |
| | 'கை' | |
| 19. | கையாட்சி | உடைமை |
| | 'சா' | |
| 20. | சார்பினர் | கட்சியினர் |
| 21. | சார்புரை | வாதவுரை |
| | 'செ' | |
| 22. | செயற்பாடுகள் | கருமங்கள் |
| 23. | செலுத்துதல் | பிரயோகித்தல் |
| | 'த' | |
| 24. | தவறிழைத்தவர் | தவறாளர் |
| | 'தெ' | |
| 25. | தெரிவிக்கை | தகவல் |
| | 'நி' | |
| 26. | நிறைவு | திருப்தி |
| | 'நு' | |
| 27. | நுகர்வது | உட்கொள்வது |
| 28. | நுழைதல் | பிரவேசித்தல் |
| | 'ப' | |
| 29. | பகுதி, பிரிவு | பாகம் |
| 30. | பயன்படுத்தல் | உபயோகித்தல் |
| 31. | பயன்பாடு, உபயோகம் | பாவனை, உபயோகித்தல் |
| 32. | பணி | சேவை |

'பி'

| | | |
|---|---|---|
| 33. | பிடித்தல் | கைதுசெய்தல் |

'பொ'

| | | |
|---|---|---|
| 34. | பொறுப்பாள்கை | நிர்வாகம் |

'ம'

| | | |
|---|---|---|
| 35. | மருத்துவர் | வைத்தியர் |

'மு'

| | | |
|---|---|---|
| 36. | முதன்மை | பிரதம |

'வ'

| | | |
|---|---|---|
| 37. | வகை | முறை, விதம் |
| 38. | வகைகாட்டி | மாதிரி |
| 39. | வழங்கல் | கொடுபடல், விநியோகம் |
| 40. | வழங்குநர் | விநியோகத்தர் |

'வா'

| | | |
|---|---|---|
| 41. | வாய்ப்பு | சாத்தியம், சாதகம் |
| 42. | வாய்ப்பையேற்படுத்தல் | வசதிசெய்தல் |

'வி'

| | | |
|---|---|---|
| 43. | விளக்கம் | விவரணம் |

'வெ'

| | | |
|---|---|---|
| 44. | வெளிக்காட்சியாக | வெளிக்காட்டி |
| 45. | வெளிப்படை | பகிரங்கம் |

'வை'

| | | |
|---|---|---|
| 46. | வைத்திருத்தல் | கொண்டிருத்தல் |

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தமிழ் சுகாதார சேவைகள்
பணியகம்
இல. 6/2 இளங்கோ வீதி
யாழ்ப்பாணம்